ஆகவே இந்த நிலையை மாற்ற இந்த ஆண்டிலாவது கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 54. ஆனால் சராசரியாக தினம் அங்கே படுக்கைகளில் இருந்து சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 95 என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவ மனையில் மட்டும் அல்ல, எல்லா மருத்துவ மனைகளி லும் இதே நிலைமை தான் இருக்கிறது. நிதி ஆதாரத்திற்கு ஏற்ப தான் படுக்கைகளின் எண்ணிக்கையை நாம் விரிவு ஆக்க முடியும். ஆனால் இது போன்ற அவசரமான நேரங்களில் சில சமயங்களில் பாய் போட்டு மருத்துவம் செய்ய வேண்டிய அவசியம் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது.

திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையை விரிவுபடுத்தல்

162—(*வினா எண் 9822)—**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் அரசு பொது மருத்துவ மனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் உள்ள மருத்துவமனை தாலுக்கா தலைமை மருத்துவ மனையாக இருக்கிறது. மிகப் பழமையான மருத்துவமனையாக இருக்கிறது. அங்கு நாள்தோறும் ஏறக் குறைய 2 ஆயிரம் புறநோயாளிகளுக்கும் அதிகமாக நோயாளிகள்

1987 மார்ச் 25]

வந்து அங்கே சிகிச்சை பெறுகிறார்கள். மேலும் விரிவுபடுத்த அதற்கு போதிய இட வசதியும் இருக்கிறது. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை கருத்தில் கொண்டு அங்கு புதிய வார்டுகளை அமைக்க ஆலோசனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மருத்துவமனை 156 படுக்கை களைக் கொண்ட மருத்துவமனையாக இருக்கிறது. அங்கு உள் நோயாளிகள் 180 பேர் தங்கி மருத்துவம் பெற்று வருகிறார்கள். சராசரியாக வெளி நோயாளிகளின் வருகை எண்ணிக்கை 2 ஆயிரம் பேர் வருகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. 1,200 பேர் தான். இருந்தாலும் அங்கே மேலும் இடம் காலியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இடம் காலியாக இருக்கிறது என்பதற் காகக் கட்டிடங்களை கட்டிவிட முடியாது. நிதி ஆதாரங்களை பார்த்து புதிய கட்டிடங்களை கட்ட மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே புற நோயாளிகளுக்கு சிகிச்சை பார்க்கும் டாக்டர்கள் ஒரு சிறிய அறையில் ஒரே மேஜையில் சுற்றி 10 மருத்துவர்கள் உட்கார்ந்து அந்த புற நோயாளிகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது போல் 1,200 புற நோயாளிகளை சிறிய அறையில் உட்கார்ந்து கொண்டு சிகிச்சை பார்த்து வருகி றார்கள். இந்த நிலையை கருத்தில் கொண்டாவது அந்த புற நோயாளிகள் சிகிச்சை பிரிவை மேலும் விரிவுபடுத்தி அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடியவே முடியாது என்று சொல்ல வில்லை. தற்சமயம் இல்லை என்று தான் சொன்னேன். நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப நிச்சயமாக கவனிக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் உள்ள அந்த மருத்துவமனை தாலுக்கா தலைமை மருத்துவமனையாக இருப்பதால் அங்கே அதிக அளவுக்கு புற நோயாளிகள் வருகிறார்கள். இதுவரையில் அங்கே ரத்த சேமிப்பு நிலையமோ அல்லது ஸ்பெஷல் வார்டோ இல்லை. ஆகவே அவைகளை அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் தற்போது இல்லை. இருந்தாலும் தாலுக்கா தலைமை மருத்துவமனை என்ற காரணத்தால் இவைகளைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

விக்கிரமசிங்கபுரம் அரசு மருத்துவமனை.

163—(* வினா எண். 9666)—திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 10-30)

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் ஏறத்தாழ 65,000 மக்கள் வசிக்கின்றார்கள். இந்த மருத்துவமனையானது குறைந்த படுக்கைகளைக் கொண்ட, சிறிய மருத்துவமனையாக இருக்கிறது. மேலும் இந்தப் பகுதியிலே தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கின்றார்கள். தனியார் மருத்துவமனை என்று இங்கு ஒரு மருத்துவமனையும் கிடையாது.